Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞு மார்கழி மீ உஉ உ வெள்ளிக்கிழமை (6 JANU. 1956) [இல-௪0]

# தலைவர்கள் ஒன்றுபட வேண்டும்

## சமஷ்டியா தனிஅரசா என்னும்வாதம் தீமைதரும்

### பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தின் அறிவுசான்ற அழைப்பு

"அன்று சிங்கள சமுதாயத்தைக் காப்பாற்ற ஓர் இராமநாதன் போராடியது போல் இன்று தமிழ் பேசும் சமுதாயத்தின் பிறப்புரிமைகளைக் காக்க ஒரு சிங்கள மகன் இல்லையா என்று நான் கேட்கிறேன்? அப்படியிருந்தால் அவர் இன்றே வெளிப்படவேண்டும் சனநாயக அடிப்படையில் ஆக்கப்பட்டிருப்பதெனக் கூறப்படும இச்சுதந்திர நாட்டில் சாதியை அல்லது மதத்தைக் கொண்ட கட்சிகள் உருவாக்கப்படுமாயின் ஜனநாயகம் எங்கே? சுதந்திரம் எங்கே? இவைகள் பகல் கனுக்களாகத்தான் முடியும்.

வெறி கொண்டாடும் சிங்கள மக்களின் துவேஷத்தை அடக்கி, அயர் கொண்டாடும் சிறுபான்மை மக்களின் பீதியையும் அகற்றி ஒரு உண்மையான ஐக்கிய இலங்கையை உருவாக்க அடிகோலவேண்டுமானல் கனம் டட்லி சேனநாயக போன்ற சிங்களத் தலைவர்கள் தங்கள் துவேஷ மனப்பான்மையை ஒழித்து தேசாபிமானமுள்ள தொண்டர்களாக முன்வரவேண்டும். அன்றேல் சீரும், சிறப்பும், ஐக்கமமும் செல்வமும் நிறைந்திருக்கக் கூடிய இலங்கை பாழாகிவிடும்"


இன்று நாங்கள் கூடியிருப்பது சிறுபான்மையினராகிய தமிழ் பேசும் மக்களின் பாஷை, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவைகளைப் பெரும்பான்மைச் சமுகத்தினரிடம் "மடிப்பிச்சை" கேட்பதற்கு அன்று. ஏறக்குறைய இருபது இலட்சம் தமிழ் பேசும் மக்களுடைய பிறப்புரிமையாகிய தமிழ்ப் பாஷைக்குச் சிங்களத்தோடு சம அந்தஸ்து இந்நாடு முழுவதிலும் அளிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கேட்பதற்காகத்தான் இங்கே கூடியிருக்கின்றோம். சிறுபான்மை மக்கள் கோரும் இவ்வேண்டுகோளை அரசாங்கம் சுமுகமாகத் தீர்த்து வைக்காவிடின், எங்கள் முன்னோர்களின் அரும்பெரும் பாட்டினால் ஆக்கப்பட்ட சுதந்திரம் கெட்டுப் போவதுடன் ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்கும் நோக்கமும் சிதைவடையும் என்பதில் ஐயமில்லை.

இப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டும்? சாதி மத பேதமின்றித் தமிழ் - முஸ்லிம் மக்கள் தங்கள் பாஷைக்காகப் போராட முன் வரவேண்டும். தமிழ்த் தலைவர்கள ஒன்றுபட வேண்டும, தமிழ் பேசும் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும். தமிழ் பேசும் தலைவர்களின் முகாமொன்றைக் கட்டிப் பல கட்சியினரும் தீர்க்காலோசித்து ஒரு பூரண முடிவுக்கு வரவேண்டும். சம அந்தஸ்து, தனித் தமிழ்நாடு, சமஷ்டி ஆட்சி என்று தமிழ்த் தலைவர்கள கூச்சலிட்டுக்கொண்டிருந்தால் ஒருபொழுதும் எங்கள உரிமைகளைப் பெறவும் முடியாது; ஒற்றுமையை உருவாக்கவும் முடியாது. இருபது இலட்சம் தமிழ்பேசும் மக்களின ஒத்துழைப்பையும், நல்லெண்ணத்தையும் பெறுமல் எந்தச் சிங்கள அரசாங்கமாவது இந்நாட்டில் ஆட்சி செலுத்த முடியாது. இது நிச்சயம். அவர்களிடையே மதப் பிரிவு, சாதிப்பிரிவு ஏற்பட்டதும், அவர்கள் அரசாங்கத்தைச் சின்னாபின்னமாக்கி விடுவார்கள்.

பிக்குகளின் கையில் இன்று அரசியல் அதிகாரம் சிக்கினல், அரசியல் பண்பாடு முழுமையும் உருக்குலைந்துவிடும். இந்நாடும் இக்கதியை அடைந்த பிறநாடுகளின் நிலைமையையே அடையும் என்பது திண்ணம். இந்நாட்டின் சரித்திரத்தில இன்று ஏற்பட்டிருக்கும் அபாயகரமான நிலையை மாற்றுவதற்கு தூரதிருஷ்டி படைத்த சிங்களததலைவர்கள் முன்வந்து, இந்நாட்டு மக்கள் சுமுகமாகவும, தன்மானத்தோடு தங்கள தங்கள கலை, கலாசாரம், பாஷை முதலியவற்றைக் காப்பாற்றி வாழக்கூடிய வழியைக் காண முடியாவிட்டால் நாங்கள் பிரிந்து வாழ வேண்டியதுதான் ஒரே வழியாகும். அது தனி அரசியல் வழியோ சமஷ்டியோ என்பதைத்தான் கூடிய கெதியில் சிறுபான்மைத் தலைவர்கள் தீர்க்கவேண்டும. இந்த நேரத்தில தமிழ் பேசும் மக்களாக இங்கிருக்கும ஆண்களையும் பெண்களையும துாங்காமல் தலைநிமிர்ந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்," என்று கழுவாஞ்சிக்குடியில் நடந்த தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ் எம். இராசமாணிக்கம பேசும போது கூறினர்.

### சேனநாயகவுக்கு சோதனை

இலங்கை இந்தியதொடர்பில சேர். ஜோன் பெரும் பிழை செய்துவிட்டாரென்று சந்தித்த இடமெல்லாம் கண்டித்து திரிந்தார் ஸ்ரீ ஆர். ஜீ. சேனநாயக. நடந்தது எப். ஆர், சேனநாயக நினைவு விழா, சேர். ஜோன் தலைமையில் அத்தருணம் இந்தியாவுக்குச் சென்று இந்தியமுதல மந்திரியுடன் பேசி இலங்கை இந்தியர் பிணக்கைத் தீர்க்கும்படியும் வேண்டிய அதிகாரத்தைத் தாம் கொடுப்பதாகவும் சேர். ஜோன் கொத்தலாவல ஓர் சோதனையை, ஆர். ஜீ. க்கு உண்டாக்கிவிட்டார்.




ஆசிரியத் தலை:

# 'புளுகுப்' போட்டியா? பொழுது போக்கா?

## பேச்சுப் புயல் வீச்சால் விளையும் நட்டம்

பகல் முழுவதும் ஊர் ஊராகச் சென்று விட்டு இரவில் ஓய்வெடுப்பவர்கள் தாராளமாக மடங்கட்டுவது வழக்கம். ஒருவர் ஒரு மாடி மடங்கட்டுவர். இன்னெருவர் இருமாடி .... .... இவ்வாறு இரவு கழியும் வரைக்கும் மடங்கட்டும் போட்டி நடக்கும், ஒருசெம்பொற் காசுதானும் செலவு இராது. பொழுது புலர்ந்ததும் மறுபடியும் ஊர் ஊராகச் செல்வர்; மற்றை நாளும் இரவு வந்ததும் பழையபடி மடங் கட்டப்படும் .... .....

இவ்வாறே புழுகுஎன்று வழக்கிலுள்ள ஒரு போலிப் பேச்சு நடத்துபவர்களும் போட்டியிடுவது வழக்கம். இமயத்திலே கம்பக் கூத்தாடினேன் என்பர் ஒருவர்; அதை வெல்ல மற்றையவர் இமயத்தைப் பந்தாய் எடுத்துரைத்தேன் என்பர் .... .... .....

இந்த வகையிலே ஈழ நாட்டிலே ஒரு பொழுது போக்கு எழுந்துவிட்டது.

இருபத்து நான்கு நாட்களில் இரு மொழிகளையும் அரச மொழிகளாக்குவேன் என்றார் ஒருவர். இல்லை இருபது நாழிகையில் என்றார் இன்னொருவர். இருபத்துநான்கு விடிப் பொழுதில் இதைச் செய்து முடிப்பேன் என்றார் வேறொருவர். இவ்வாறு சொல்லி இருபத்து நான்கு திங்கள் விரைந்தோடிவிட்டன. இன்னமும் ஒன்றும் ஆகவில்லை. போலிப் பேச்சுப் போட்டியின் பொலிவைப் பாருங்கள்.

தெற்கிலே சிங்களமொழி திணிப்பதாய் ஒரு கூற்று. புத்த மதம் புகுத்துவதாய் இன்னொரு கூக்குரல்.

வடக்கிலே தமிழ் அரசு ஒருசாரார் — தமிழ் நாடு இன்னொரு சாரார், தமிழகத்திலே தெய்வலோகம் என்று பிறிதொருசாரார். இவ்வாறு பேச்சுப்போட்டி போய்க்கொண்டிருக்கிறது. பொதுசனம் இது எது அது எது என்று விளங்க முடியாது தத்தளிக்கின்றது.

அதற்கிடையிலே விடுதலைத் தினம் என்று ஒரு வெளியறிக்கை. கர்தால் என்று ஒரு அறிவித்தல்.

பொதுசனத்துக்கு முன் நிகழ்ந்த ஆவணிக் கர்தால் நினைவிருக்கின்றதல்லவா? தந்திக் கம்பியுடன் தொந்தரைக்குப் போகும் கர்த்தாலா? தண்டவாளத்துடன் மீண்டும் கர்த்தாலா இனி வரும் கர்த்தால் என்று ஆராய்ச்சி நிகழ்கின்றது .... .... .... ?

---

### தமிழ்க் கட்சிகளுக்குள் சமரச முயற்சி

ஊர்காவற்றுறையில் ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவாகள் பேசும் போது மேற்சபை அங்கத்தவர் திரு. எஸ். நடேசன் தமிழ்க்கட்சிகளுள் சமரசம் உண்டாக்கும் முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருக்கின்ருரென்று குறிப்பிட்டாராம்.

### இருநூறு பூட்டப்பிள்ளைகள்

களகம்பலாத என்ற இடத்திலுள்ள ஸ்ரீ இராசகருண என்னும் ஆயுர்வேத வைத்தியர் 118-ம் வயதில் இறந்தாராம். அவருக்குப் பல பேரப்பிள்ளைகளோடு ஏறக்குறைய இருநூறு பூட்டப்பிள்ளைகள் வரையிலிருக்கிருர்களாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். மன்மத ஹு மார்கழி ௨௨ வெள்ளிக்கிழமை

# தீர்க்க தரிசனத்துடன் நல்வழி காட்டிய தீரர்

## ஆலயச் சட்டத்திற்கு அன்றே அடிகோலிய அண்ணல்

## செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்கச் செய்த நாவலர்

திரு வெ. சு. நடராசா
கொழும்பு

நாவலர் தேவார திருவாசகங்களை ஓதுவதிலும் பிரசங்கம் செய்வதிலும் தாமே வழிகாட்டியாக நின்று பணி செய்தாரல்லவா? இன்று அவர்பணி நாடெங்கிலும் பரவிக் கூட்டுப்பிரார்த்தனைகளாகவும் கதாப்பிரசங்கங்களாகவும் நடந்து வருவதும் உண்மையே.

நம் நாட்டிலிருந்த ஆலயங்களெல்லாம் சீரும் சிறப்பும் பெற்று நடைபெற வேண்டுமென்று விரும்பினார். கோவிற் சொத்தையெல்லாம் மானிடப் பெருச்சாளிகள் விழுங்கியதை இவர் பலமாகக் கண்டித்தார். கோவில் அர்ச்சகர்கள் நல்லொழுக்கத்துடன் நற்சேவை புரிய வேண்டுமென்று விரும்பினார். அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்ற கொள்கை கூட இவரிடமிருந்ததுண்டு. ஆனால் இவர் கூற்றிற்கு அக்கால மக்கள் செவிசாய்க்கவில்லை. இன்று பொதுமக்களின் கிளர்ச்சியினாலும் சமய சம்பந்தமான சபைகளின் விடாமுயற்சியினாலும் அரசாங்கம் ஆலயபரிபாலனச்சட்டமியற்றுதற்கு வேண்டுவன செய்வது இவரின் தீர்க்க தரிசனத்தை நிரூபிக்கின்றதல்லவா?

தமிழும்சைவமும்ஒன்று. தமிழிலிருந்து சைவத்தையும், சைவத்திலிருந்து தமிழையும் பிரிக்க முடியாதென்ற வகையில் இவர் வாழ்க்கை பிரதிபலிக்கும். தமிழ் அரியாசனத்தில் இருக்க வேண்டுமென்று விரும்பினார். எனவே தான் தனது பணிகள் எல்லாவற்றையும் தமிழில் செய்து வந்தார். விவிலிய நூலை (பைபிளை) மொழிபெயர்க்கக்கூடிய ஆங்கில அறிவு கிரமப் பெற்ற இவர் ஆங்கிலத்திற் கூடப் பணிகள் புரிந்திருக்கலாம். இவர் அப்படிச் செய்திருந்தால் இன்று ஆங்கில உலகம் இவரைப் போற்றும். ஆனால் இவருக்குத் தமிழ் மீதிருந்த பற்றினாலேயே தமது வாழ்நாளையே தமிழுக்காகவும் சைவத்திற்காகவும் அர்ப்பணித்து வாழ்ந்தார்.

சேர்.பொன். இராமநாத வள்ளலைச் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுத் தனுப்புவதற்காக எவ்வளவு ஆர்வங் காட்டியிருக்கின்றார். ஆர்வங்காட்டி வெற்றியும் பெற்றார். மேடை மேடையாக கூட்டங் கூட்டமாக நாவலப் பெருந்தகை பேசி, இராமநாதனுடன் போட்டியிட்ட பிறிற்றோ என்னும் கிறித்தவரைத் தோற்கடிக்கச் செய்து இராமநாதனையே சட்ட சபைக்கு அனுப்பினார். இராமநாதன் அரசியல் வாழ்வில் ஈடுபட்டதனாலன்றோ நம் நாடு விடுதலைபெற அத்திவாரமிடப்பட்டது. இராமநாதனைச் சட்ட சபைக்கு அனுப்ப ஆதரவளித்து நம நாட்டுச் சுதந்திரத்துக்கு முதற்காரணமாக இருந்தவர் நாவலர் [illegible] மல்லவா?

தீர்க்கதரிசி நாவலர் செய்த பெரும் பணிகளிலெல்லாம் சிறந்தது அக்காலம் அவர் அளித்த இலவசக்கல்வியே. கையிலிருந்த உத்தியோகத்தையும் உதறித் தள்ளிவிட்டு தன்னந்தனியனாக இலவசக் கல்வியூட்டியவர் இவரே. நம்நாட்டில் அன்று அவர் அளிக்க எண்ணிய இலவசக் கல்வியைப் பின்பற்றி இன்று எம் அரசாங்கம் இலவசக் கல்விமுறையைக் கைக்கொண்டு நடத்தி வருவதும் சிறந்ததே.

மேலே காட்டிய பல உதாரணங்களால் நாவலரது தீர்க்க தரிசனமான பேச்சுக்களையும் செயல்களையும் கண்டு வியந்தோமல்லவா? எனவே இனி அவரது இறுதிக்கால வாழ்க்கையையும் சிறிது அறிவோம்.

நாவலர் ஒருமுறை ஒரு பறங்கி அல்லது வெள்ளைக்கார நீதிபதியொருவர் வெட்கித் தலைகுனியும்வண்ணம் செய்ததும், பிறிதொருபோது இந்தியாவில் ஒரே முறையில ஒரே பொருளில், ஒரேபாத்திரத்தில் இருவகைச் சுவையுடைய கறிசமைத்து நண்பர்களுக்குப் பரிமாறியதும் இவரது சாமர்த்தியத்தை நன்கு புலப்படுத்தும்.

இறுதிக் காலம் முழுவதும் இந்நாட்டிலும் இந்தி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## யார் ஏற்றும் காற்றாடி ஆகாயத்தை அளாவும்

சிங்களமகாசபைத் தலைவராயிருந்து வகுப்புவாத நஞ்சை வாயிலும் நெஞ்சிலும் வைத்துக்கொண்டு ஈழத்தின் அரசியற் காற்றில் ஆலகாலவிடத்திலும் மிகக்கொடிய இனப்பகைமையை மூட்டுவித்து இலங்கைவாழ் இந்தியரின் பரமவிரோதியாகப் பயங்கரக் கொள்கையை நாட்டிற் பரப்பிவந்த திரு. S. W R. D. பண்டாரநாயக விடுதலைக் கட்சியின் போர்வையில் நின்று மனிதப் பண்பாடற்றபேச்சினாற் புரட்சியையுண்டுபண்ணிவிட்டாற் பிரதமர் பதவி தம்மை வந்தடையும் என்று எண்ணிக்கொண்டு இத்தேசத்தைச் சின்னபின்னப்படுத்தத் துணிந்து விட்டார். தமிழ் அன்பர்களைத் தமது விடுதலைக் கட்சியிற் சேர்த்து இருமொழிகளுக்கும் சம உரிமை கொடுக்கலாமென்று வாக்களித்துவிட்டு அக்கட்சியின் கொள்கையையும் மாற்றி அமைத்துவிட்ட இந்த அரசியல்வாதி அடுத்துவரும் தேர்தலுக்கு ஆயத்தம் செய்யும் நோக்கமாகக் காற்றாடி ஏற்றுவதிற் கவனஞ் செலுத்திவருகின்றதை நோக்குமிடத்து இலங்கையின்எதிர்காலம் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்று சிங்களச் சகோதரர்களுக்குமே பேராபத்தாக விளைந்துவிடும் என்பதற்கையமின்று.

ஐக்கியதேசியக் கட்சியை அல்லும் பகலும் தூற்றி வரும் திரு. பண்டாரநாயக அக்கட்சிக்கு ஒருவகையில் ஆதரவளிக்க முன் வந்திருக்கின்ற விந்தையைக் கண்டு யார் சிரியார்? யார் ஆச்சரியப்படார்? தமிழ்ப் பிரதிநிதிகளை ஒரு புறத்திலே ஒதுக்கிவிட்டு ஒரு மொழிக் கொள்கையைப் பாராளுமன்றத்திலே சட்டமாக்குவதற்கு இந்தச் சனநாயக வீரன் எழுந்துவிட்டார். இதன் பொழிப்பு என்ன என்று எடுத்துரைத்தல வேண்டுமா? கர்ப்பூரம் காட்டு முன்னரே சந்தைய கொள்ளத் தொடங்கியிருக்கும் இந்த விடுதலை வீரர் தம்மை உலகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றதென்பதை மறந்தாரா போலும். ஐக்கிய நாடுகளின் அமைப்பிலே பாரத நாட்டின் நாட்டின் பெருமுயற்சியினாலும் உருசிய தேசத்தாரின் ஒத்துழைப்பாலும் இடம்பெற்ற இலங்கை, இந்த உலக தாபனத்திலே மதிப்புப் பெறுவதற்கு இதுதானா வழி என்று கேட்கின்றோம்.

காற்றாடியை யேற்றிக் கார்வானிடை உயர்த்துவதில் ஆற்றலை யார் உடையவர் என்று அரசியற் கட்சியினர் முயற்சிப்பதை நாம் தடுக்கவில்லை. ஆனால் ஐக்கிய நாட்டு அமைப்பிலே இருக்கின்ற மற்றைய தேசங்கள் இந்தக் காற்றாடி ஏற்றும் ஆற்றலைக் கண்டு மயங்கிவிடமாட்டார் என்பது மாத்திரம் அல்ல, இலங்கையின் அரசியல் ஞானத்தின் அந்தரங்க சூனியத்தையும் யூகித்துவிடுவார்கள் என்பது நிச்சயம்.

திரு. பண்டாரநாயக தமிழ்ப்பிரதிநிதிகளை இப்பொழுதே அரசியல் அரங்கிலிருந்து அகற்றிவிடத் துணிந்த துணிபே துணிபு. இந்த விடுதலை வீரரைத் தென்பாகத்துள்ள ஏனைய காற்றாடி வீரர் தோற்கடித்துவிடுங் காலம் அண்மித்துவிட்டது என்ற உண்மையைத் திரு. பண்டாரநாயக எண்ணுவரேயாகில் இனவெறிப் புரட்சியென்னும் தழலைக் [illegible] தாங்க மாட்டார் என்று நினைக்கின்றோம்.

### தமிழர் — முஸ்லிம்கள்

## இனத்தால் ஒன்றானவர்கள்

### மருதானை முஸ்லிம் முழக்கம்

கழுவாஞ்சிக்குடியில் மருதானையைச் சேர்ந்த ஜனாப் ஏ. எம். அமீர் பேசுபோது "இந்நாட்டிலுள்ள எல்லா முஸ்லிம்களின தும் தாய்மொழி தமிழே. இதனை யாராவது மறுக்க முடியுமா? என்று நான் சவால்விடுகிறேன். தமிழர்களும முஸ்லிம்களும் இனத்தால் ஒன்றுபட்டவர்கள். ஆனால் மதத்தால் மாத்திரம் பிரிக்கப்பட்டவர்கள். இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் பூராவுக்குமாகப் பேசுவதற்கு சோனக — முஸ்லிம் மகாநாட்டுக்கு யாதொரு உரிமையும் இல்லை. சிங்களத்தை யாதரம் ஆதரிப்பதற்கு அவர்கள் செய்த முடிவு முஸ்லிம் சுயநலவாதிகள் கோஷ்டியொன்றின் துரோகத்தனமானசெயலென்று சரித்திரத்தில் எழுதப்பட்டுவிடும்.

தமிழர்களோடு தோளோடு தோள் சேர்ந்து நின்று தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராட வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். இந்தப் போராட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களின் முஸ்லிகள் முன்னணியில் நிற்பார்கள். தமிழர்களுக்கிடையே ஐக்கியம் நிலவ வேண்டும்"

## மனப்புண்ணுக்கு மருந்து

### திருக்கேதீச்சரத் திருப்பணி

"பல்வேறு பிரச்சினைகள் தமிழரின் மனதைப்புண்படுத்திவரும இந்நாட்களில் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சேவையில் நாம கவனம் செலுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்" எம்முன்னோர் எத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்டபோதும் மனந்தளராமல் சிவாலயங்களை நிர்மாணித்துச் சிவதொண்டைத் திருப்திகரமாகச்செய்து வந்தனர். புராதன காலத்தில் இலங்கைக்கு வந்த இராசகுமாரன் விஜயன் இந்து மதத்தைச் சேர்ந்தவன் என்பது நிரூபிக்கத்தக்கவிஷயம். அவன் மாதோட்டத் துறைமுகத்தில் தான் இறங்கினான் என்று சரித்திரங் கூறுகிறது. எனவே அவ்விடத்திலிருந்த சிவஸ்தலத்தில் அவன் வணக்கம் செய்தான் என்பது சரித்திராசிரியர்களின் தீர்க்கமான துணிபு. இற்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இத் திருத்தலத்தைப் பற்றித் தோத்திரப்பாக்கள் பாடியிருக்கின்றார். ஆகையால் இந்தக் கோவிலை நாம் புனருத்தாரணஞ்செய்வது இந்துக்களின் நலனுக்காக மாத்திரமல்ல இலங்கைவாழ் மக்கள் அனைவருக்காகவுமாகும்" என்று திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை ஆதரவில் நீர்வேலியில நடந்த கூட்டமொன்றில் சேர். கந்தையா வைத்தியநாதன கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

# தமிழ் பேசும் மக்கள் ஒன்று சேருக

தமிழ் பேசும் மக்கள், பிரிவு பட்ட மனப்பான்மை யில்லாமல் ஒரு மக்களாக சகோதரர்களாக வாழப் பழகவேண்டும். சிங்களச்சகோதரர்கள் பெருந்தன்மையையும் நடுவு நிலைமையையும் இழந்து புகுந்திடுமாறிருக்கும் சோதனைக்குரிய நெருக்கடியான இச் சூழ்ச்சி நிலையில், பாராளுமன்றத் தமிழ்ப் பிரதிநிதிகள் மூலைகளிலிருந்து இடையிடையே தங்கள் கருத்துக்களை வெளியிடுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. பாராளுமன்றத்தில் தற்போதிருக்கும் பிரதிநிதிகளுடன் முன்னிருந்த அங்கத்தினர்களான சேர் அ. மகாதேவ, சேர். வை. துரைசுவாமி, திரு. சு. இராசரத்தினம் போன்ற அனுபவம் வாய்ந்த பிரமுகர்களும் ஒருங்குசேர்ந்து ஒரு மேடையில் சந்தித்து தமிழர் இச் சூழ்நிலையில் செய்ய வேண்டியது என்ன வென்று தீர்க்க ஆலோசனை செய்யவேண்டும். தற்போதிருக்கும் பாராளுமன்ற அங்கத்தினர் யாவரும் தாங்கள் இன்ன இன்ன கட்சியைச் சேர்ந்தவர்களென்பதை மறந்து சுயநலமற்ற துவேஷ மனப்பான்மையில்லாத தூய மனதுடன் தற்போது என்ன செய்ய வேண்டுமெனபதைத் தீர்க்க ஆலோசனை செய்ய வேண்டும். நெருக்கடியான இந் நேரத்தில் தமிழ் பேசும் மக்களிடத்தில் பிரிவு ஏற்படின் தமிழ்ச் சமுதாயம் ஈடேறமாட்டாது. தனி ஆட்சியுள்ள தமிழ்நாடா அல்லது சமஷ்டி ஆட்சியா இலங்கை இப்போதிருக்கும் நிலையில் நிரந்தரமான நன்மையைக் கொடுக்கக்கூடுமென்று பரிசிலனை செய்யவேண்டும். மற, மன்னி (Forget and forgive) என்னும் மகத்தான வாக்கியம் எமது ஞாபகத்தில் இருக்க வேண்டும். பழைய காரியங்களைத் தலைவர்கள் மனதில் வைத்திருக்கக்கூடாது. தலைவர்களிடையில்தான் கருத்து வேற்றுமை யிருப்பதே தவிர பொது மக்களிடத்தில் வேற்றுமை இப்போது இல்லை. ஆகையால் ஒரு மேடையில் தலைவர்கள் சந்தித்து அளவளாவினால்தான் பொது சனங்களுடைய நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவார்கள். மொழிப் பிரச்சனையிருக்கும்போது கட்சிகள் இருக்கவேபடாது. ஒருவர் ஒருவழி சொல்லி அது சரியெனக் கண்டால் அதை அனுசரிப்பதே அறிவாகும். ஒருவர் தொடக்கினதை மற்றவர் ஏற்கக் கூடாதென்று நினைப்பது அறிவீனம்.

"எப்பொருள் யார் யார்
வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு".

என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கு. சோதைத் தலைவர்களும் கட்சிபேதமில்லாமல் ஒருமுகமாக இவ்விஷயத்தில் நின்றால் இறுதியில் வெற்றி கைகூடும். தலைவர்கள் ஒன்று கூடுவது எந்நாள் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தவண்ணமாகவிருக்கின்றனர். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு". எழுமின்! விழிமின்!

ஓர் தமிழன்.

---

மயிலிட்டி தெற்கு

# இளஞ் சைவத் தொண்டர் சபை

## ஆண்டு நிறைவு விழா

மயிலிட்டி தெற்கு இளஞ் சைவத்தொண்டர்சபை 15-ம் ஆண்டு நிறைவு விழாவுக்கு பண்டிதர் சைவத் திரு. இ. நமசிவாயம் அவர்கள் தலைமை வகித்து கூறியதாவது:—

மக்கள் நினைப்பன அநந்தம்; சொல்வன சில; செய்வன சிலவினுஞ் சில. இக்காலச் சீர்கேட்டுக்கு மூலகாரணம் சமய உணர்ச்சியின்மை. சமயத்தை அறிவதில், அது பற்றிப் பேசுவதில் அதிக பயன் இல்லை. சமயத் தொண்டு புரிவதிற்றான் உண்மையான பயன் இருக்கின்றது. அந்த வகையில் இவ்வூர் இளைஞர்கள் முன்னேறி வருகிறார்கள் என்பதை நாம் காணும்போது சந்தோஷப்படாமல் இருக்க முடியவில்லை.

சைவத்தொண்டர் சபையின் இக்காலத் தலைவர் திரு. த. கதிரவேலு அவர்களும் ஏனைய காரியதரிசிகளும் புரிந்து வருகின்ற சமயத்தொண்டு எமமாற போற்றப்படற்குரியது. ஆலயத்தில் உழவாரத் தொண்டு புரிதல், வெள்ளிதோறும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தல், சமய குரவர் குருபூசைகள் நிகழ்த்தல், மார்கழி வைகறையில் ஊர்தோறும் சென்று அருட்பாக்கள் மூலம் மக்களின் துயிலுணர்த்தல், காலத்துக்குக் காலம் பெரியோர்களைக் கொண்டு அறிவுரை நிகழ்த்துவித்தல் முதலிய தொண்டுகளை அவர்கள் நியமமாகப் புரிந்துவருவது சந்ததி சந்ததியாக இவ்வூருக்குப் பயன்படக்கூடியது. நிற்க,

சிவனும் உமையும், பேதமாயும், அபேதமாயும், பேதாபேதமாயும் எங்ஙனம் கொள்ளப்படுகின்றனரோ, அங்ஙனமே சைவமும் தமிழும் பேதமாயும், அபேதமாயும், பேதாபேதமாயும் கொள்ளப்படும். சைவமின்றித் தமிழ் இல்லை. தமிழின்றிச் சைவமில்லை. அந்தவகையில் சைவசமயச் சபைகளில் தமிழ் பற்றிப் பேசுதல் தவிர்க்கமுடியாத தொன்றாகும்.

இளஞ்சைவத்தொண்டர் சபைத் தலைவர் ஆசிரியர் திரு. த. கதிரவேலு அவர்கள் பேச்சாளர்களையும் சபையோரையும் வரவேற்றுரையாற்றினர்.

திரு. மு ஞானப்பிரகாசம் B. A., B. Sc. அவர்கள் 'சமய பண்பாடும் இளைஞர்களும்' என்ற பொருள் பற்றிப் பேசும்போது இக்கால இளைஞர்கள் இறை வழிபாட்டில் சிற்றளவில் அவசியத்தையும் சிவ வணக்கத்தின் சிறப்பையும் குறிப்பிட்டனர்.

'சைவமக்களே சிந்தியுங்கள்' என்று சொற்பெருக்காற்றிய திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் முன்னாள் ஈழநாட்டுப்புத்தர் திருவாதவூரரிடம் வாதுக்குச் சென்று வாய்பேச முடியாது ஊமர்களாகிப் பின் மணிவாசக அடிகளின் கருணையினால் வாக்கு நலம் பெற்ற வரலாற்றைக்குறிப்பிட்டு இக்காலத்து இறுமாப்புக் கொண்டு இரணிய முறையிற் சிங்களமே மொழி புத்தமே மதம் என்று போருக்கெழுந்திருக்கும் அத்தனை பேரும் அவ்வாறே ஆற்றலற்றுப் போவது திண்ணமென்றும் [illegible] இவ்வூர் [illegible] திரு [illegible] நிகழ்த்துவதற்குச் சைவர்கள் திருவாதவூரடிகளின் வழிவழி ஒழுகி உண்மைச் சைவர்களாக வாழ்வதற்குச் சிந்திக்க வேண்டும் என்றும் கூறினர்.

தெய்வத் தமிழ் பற்றிப் பேசிய நியாயவாதி திரு M. பாலசுந்தரம் B. A B. Sc. அவர்கள் தெய்வத் தமிழ் பேசும் மக்கள் தெய்வத்தன்மையுடையவர்களாயிருத்தல் வேண்டும் என்றும், ஆகவே துவேஷம், கோபம் விபரீதம் முதலிய துர்க்குணங்களில்லாது உண்மை நெறியில் ஒன்றுபட்டால் இம்மொழியை எம்மொழியாளரும் ஒதுக்கி வைக்க முடியாதென்றும் கூறினர்.

பண்டிதர் வ. முத்துக்குமாரு அவர்கள் நன்றியுரை கூறினர்,

---

# சைவ சித்தாந்தம் தரும் ஒப்பிலாப் பக்தி நெறி

## ஞானநெறியிற் காணும் தனிச் சிறப்பு

### சைவ சித்தாந்த மகாசமாசப் பொன்விழாவில் அமைச்சர் கௌரவ சு. நடேசபிள்ளை அவர்கள் நிகழ்த்திய பேருரை

தமிழகம் பண்டு தொட்டு பக்தியிற் சிறந்த நாடாக விளங்குகிறது. ஒருருவம் ஒருநாமம் ஒன்றுமில்லாத பரம்பொருளுக்கு உருவத்தையும் நாமத்தையும் கொடுத்து அதன்வழிப் பட்டு ஆன்மா அதுவேயாகிப் பேரின்பப் பெருவாழ்வை அடையும் பக்தி மார்க்கம் சைவ அடியார்களாலும் வைணவ ஆழ்வார்களாலும் இந்நாட்டில் நிலை நிறுத்தப்பட்டது. அவர்கள் தாம் பெற்ற அநுபவத்தை அமுதப் பாசுரங்களில் அருளிச் செய்தார்கள். அவற்றைப் பாடுங்கால் நாமும் அவர்கள் பெற்ற அநுபவத்தில் தோய்ந்து பரவச நிலையை ஒரு சிறிதாவது அடையக்கூடியவர்களாகின்றோம். திருவாசகத்துக்குஉருகாதார் இல்லை என்பது நாமறிந்த உண்மை. திருவாசகத்துக்கு இருக்கும் இத்தகைய ஆற்றல் வேதத்துக்கும் இல்லை என்றனர் ஒரு தமிழ்ப்பெரியார். இக்காலத்தில் ஆங்கில நாட்டில் பன்மொழிப் புலவராக விளங்கும் பார்னட் பேராசிரியர், உள்ளத்தை உருக்கும் பக்திப் பாடல்கள் தமிழில் இருப்பதுபோல் வேறெந்த மொழியிலும் இல்லை என்று கூறியுள்ளார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய திருமுறைகளுக்குப் பின்னர், பட்டினத்தடிகள் பாடிய பாடல்களும், அருணகிரிநாதர் அருளிய தோத்திரங்களும் நமது உள்ளத்தை ஈர்த்து பக்தியிற் பதிய வைக்கும் பெற்றி வாய்ந்தவை. தமிழகத்தில் வாழையடிவாழையாக அடியார்கள் தோன்றித் தாம் பெற்ற அநுபவத்தை ஏனையோரும் பெறுமாறு பாடல்களை அருளிச் செய்துள்ளார்கள். பஞ்சேந்திரிய இன்பத்தைக் கடந்து, உள்ளத்தை உருக்கி, உடம்பெல்லாம் ஊற்றெடுத்துப் பாயும் பேரின்ப அநுபவம் ஒன்று உண்டு என்பதற்கும், அவ்வநுபவத்தை இப்பிறவியிலேயே பெறலாம் என்பதற்கும், இவ்வருட் பாடல்கள் சான்று பகரும் ஆப்த மொழிகளாகும்.

"போக்கும் வரவும் இரவும்
பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில்லா
தொன்று வந்து வந்து
தாக்கு மனோலயம் தானேதரும்
எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்
[லொணு
நிந்த ஆனந்தமே"

என்று அருணகிரிநாதர் இவ்வநுபவத்தை உணர்த்துகிறார். இவ்வநுபவத்தைப் பெறுவதற்கேபிறவி எடுத்தோம்; தமிழ்க் குலத்திற் பிறந்தோம். இவ்வநுபவத்தைப் பெறுதற்கு முயலாது அவமே உழன்று துக்கத்துக்கும் சோகத்துக்கும் பயத்துக்கும் ஆளாகின்றோம். இவற்றைத் தவிர்த்து வாழ்வதற்கு வழியுண்டு.

"நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே
வந்து தோன்றிடினே"

என்று அருணகிரிநாதர் வழிகாட்டுகிறார். அடியார்கள் "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை" என்பது அப்பர் அருளியவாக்கு. அவர்களுக்கு வரும் தீமையும் நன்மையாக மாறும். "ஆசறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்பது திருஞானசம்பந்தர் அருளிய உறுதி மொழியாகும்.

பக்திக் கொள்கையே நமது சமய வாழ்க்கையின் ஆதாரமாயுள்ளது. இக்காரணம்பற்றியே தமிழ் நாடெங்கும் திருக்கோயில்கள் எழுந்தன. திருக்கோயில் இல்லாத திருவிலூர் அடவிகாடே என்று கூறப்பட்டது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன பக்தி வழிபாட்டுக்குச் சாதனமாக அமைந்தன. உள்ளும் புறமும் தூய உணர்ச்சியை அடைவதற்குச் சரியை, கிரியை முதலியன உதவுகின்றன: திருவங்க

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்தம் தரும் ஒப்பிலாப் பக்தி நெறி

—:o:—

3-ம் பக்கத் தொடர்ச்சி

மாலைப்பதிகத்தில் "தலையே நீ வணங்காய்" என்ற பாக்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. திருக்கோயிலுள் மூர்த்தியின் கோலத்தையும் அங்கு நடக்கும் தீபாராதனை முதலிய காட்சிகளையும் கண்டு நம் கண்கள் புனிதமடைகின்றன. பக்திப் பாடல்களைக்கேட்டு நம் செவிகள் புனிதமடைகின்றன. இறைவனை வணங்கி நம் கைகள் புனிதமடைகின்றன; திருக்கோயிலை வலம் வந்து நம் கால்கள் புனிதமடைகின்றன; உலக வாசனையால் மலினமடைந்த நம கரணங்கள் தூய்மை அடைந்து நாளும் சிவசம்பந்தப்படுகின்றன. சைவ சமயம் ஆன்ம ஈடேற்றத்துக்குப் பசு புண்ணியத்தோடு சிவபுண்ணியம் அவசியமென்று வற்புறுத்துகின்றது. பசு புண்ணியம் பிற உயிர்களிடம் காட்டும் அன்புச் செயல். சிவபுண்ணியம் பக்தி வழிபாட்டுக்குரிய சரியை கிரியை முதலியவற்றைக் குறிக்கும். பௌத்தம் போன்ற சமயங்கள் பசுபுண்ணியத்தை மாத்திரம் போதிக்கின்றன. ஆனால் சைவ சமயம் இதனோடு அமையாது, ஆன்மா பந்தத்தினின்று நீங்குதற்குப் பதியாகிய சிவத்தின் சார்பை நாடவேண்டுமென்றும், ஆன்ம ஈடேற்றத்துக்குச் சிவபுண்ணியம் அவசியமென்றும் சாதிக்கின்றது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்ற திருக்குறளின் கருத்தும் இதுவேயாகும்.

சரியை கிரியைகளினின்று ஆன்மா யோகத்துக்கும் ஞானத்துக்கும் உரியதாகின்றது. சரியை கிரியை, யோகம், ஞானம் எனச் சைவ சமயத்தில் இச்சாதனங்கள் படிப்படியாகச் சோபன முறையில வகுக்கப்பட்டிருக்கின்றன, அந்தக் கரணங்கள் அடங்கிச் சித்தவிருத்திகள் அற்ற நிலை யோகமாகும். இச் சாந்தநிலையை அடைவதற்குப் பிராணலயம் அவசியம். இதற்குரிய உபாயங்களைப் பதஞ்சலி முனிவர் யோக சூத்திரத்திற் கூறுமிடத்து "ஈஸ்வர ப்ரணிதானத" என்று பக்திமார்க்கத்தை விதந்தோதுகின்றார். யோக சாதனையில் காயமே கோயிலாகின்றது சலனமற்ற உள்ளம் இறைவன் சந்நிதானம் ஆகின்றது. தியானத்தினின்று சமாதிப் பேறுண்டாகின்றது. இத்தகைய சிவயோகத்தை விளக்கி அப்பர் சுவாமிகள்,

உயிராவணம் இருந்து உற்றுநோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிராவணம் ஏறாது ஆனேறேறி
அமரர் நாடாளாதே ஆரூராண்ட
அயிராவணமே என்னம் மானேநின்
அருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

என்று கூறியுள்ளார்கள் இங்கு உயிராவணம் என்பது பிராணலயத்தையும், உள்ளக்கிழியின் உருவெழுதி என்பது தியானத்தையும் ஒட்டி வாழ்தி என்பது ஆன்மாவுடன் சிவம் அத்வைதமாயிருத்தலையும் குறிக்கின்றன. ஆன்மா கருவி கரணங்களினின்றும் பிரிந்து, தன்னை அறவே இழந்து, சுத்த அறிவாக இலங்குமிடத்துத்தான் சிவத்தோடு அனந்நியமாய் இருப்பதை உணர்கின்றது இதுவே அத்வைத ஞானமாகும். இந்நிலையில் நின்றோர் ஜீவன்முக்தர் ஆவர். இவ்வாறு பத்திநெறி முத்திநெறியாக முடிகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தில் இறைவனது திருவருட் சோதியில் கலப்பதற்கு முன்னர்,

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே

என்று பாடிய பராநுபவத்தை நினைந்து யாமும் பக்தி நெறியைப் பற்றி வாழ்வோமாக.

சைவ சமயத்தின் ஞானபாதம் சைவ சித்தாந்தம் எனப்படும். ஆன்மா பந்தத்தினின்று நீங்கி வீடு பேறடையும் முறையை விளக்குவது சைவசித்தாந்தத்தின் முக்கிய நோக்கம். சைவ சித்தாந்தத்துக்குத் தனிச் சிறப்பளிக்கும் மூல கொள்கைகள் உள. ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் பந்தம் பாசம் எனப்படும். பாசத்தால் கட்டுப்பட்டிருப்பதால் ஆன்மா பசு என்று கூறப்படும். பசு பாசங்களை இயக்கும் கர்த்தா பதி எனப்படுவர். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களைப் பற்றிவிரித்துரைக்கின்றது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது என்று சைவசித்தாந்தம் ஆன்ம லக்ஷணம் கூறுகின்றது. இக்கொள்கை சைவ சித்தாந்தத்து[illegible] சிறப்பாய் அமைந்து[illegible] ஆன்மா பாசத்தைச் சார்ந்த இடத்துப் பாசமயமாகவும், பதியாகிய சிவத்தைச் சார்ந்த இடத்துச் சிவமயமாகவும் உள்ளது. இதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். ஆன்மாவுக்கு மெய்ச் சார்பாகிய சிவம் சத்தாகும்; பொய்ச் சார்பாகிய பாசம அசத்தாகும்.

ஆன்மாவுக்குக் கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று நிலைகள் உண்டு கேவலத்தில் ஆன்மாவின அறிவு, இச்சை, செயல் என்ற சக்திகள் மறைக்கப்பட்டு இருண்மயமாக இருக்கும். ஆன்மாவை அவ்வாறு மறைத்து அணுத்தன்மையாகச் செய்வது ஆணவமலம் எனப்படும். இதினின்று ஆன்மா இறைவனது திருவருட் சக்தியால் சிறிது விடுவிக்கப்பட்டு, அதன அறிவு, இச்சை, செயல்கள ஏகதேசப்பட்டு விளங்கும் நிலை சகலமாகும். இந்நிலையில் ஆன்மாவின் அறிவு வியாபகமின்றிச் சுட்டறிவாக இருக்கும். சகலத்தில் ஆன்மா சிறிது பிரகாசம் பெற்று இயங்குதற்குக் காரணம் மாயை ஆகும். ஆன்மா இவ்வாறு இயங்குதற்குரிய தத்துவங்களெல்லாம் மாயையினின்றே உபகரிக்கப்படுகின்றன. ஆன்மாவின் இச்சைகளைப் பரிபக்குவப்படுத்தித் தொலைப்பதற்காகவே அதற்குக் கர்மஞானேந்திரியங்களும், அந்தக்கரணங்களும், பஞ்சபூதங்களாலாய உலகமும், பரமேசுவரனால் அளிக்கப்படுகின்றன. மாயாகாரியங்கள் ஆன்மப் பிரகாசத்திற்கு ஓரளவுக்கு உபகரிக்கப் படுகின்றமையால், மாயைமூலமலமாகிய ஆணவத்தினின்று வேறாகும். மாயாவாதிகள் கூறும் அநிர்வசனீயமாகிய மாயையினின்று சைவசித்தாந்திகள் கூறும் மாயை பிறிது. ஆயினும் இம மாயையிலும் மறைப்பு இருப்பதால, இதுவும் பாச பந்தமே ஆகும். கன்மம் புண்ணியம் பாவம் என்று இரு திறப்பட்டு, சுகம் துக்கம என்ற பலன்களுக்கு ஏதுவாய் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும தன்மையுடையதாய்ப் பாசமாகும. சகல நிலையில் ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்களும் உண்டு. நாமனைவரும் சகலர்களே நாம் தநு, கரண, புவன போகங்களைப்பெற்று, சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவர்களாக இருக்கின்றோம். சுக துக்க போகங்களை நாம் அநுபவிக்கச [illegible] டுத்துவது இறைவனது சக்தியே. கேவலத்திலும் சகலத்திலும் உடன் இருந்து மலங்களைப் பக்குவப்படுத்தி நம்மை மாயவாழ்க்கையில் நடத்தும் இச் சக்தி திரோதான சக்தி என்று கூறப்படும். இறைவனது தர்ம ரூபமான இச் சக்தி நம்மைத் தண்டித்தும், போகத்தைத் துய்ப்பித்தும் மறக்கருணைகாட்டி ஆளுகின்றது. இந்த கோர சக்தி ஆன்மா பரிபக்குவப்பட்டுச் சுத்தநிலையில் பிரவேசிக்கும காலத்தில் அநுக்கிரக சக்தியாக விளங்குகின்றது. திரோதான சக்தியைப்பற்றிச் சைவசித்தாந்தம் கூறும் விளக்கம் ஏனைய சித்தாந்தங்களில காண்பது அரிதாகும்.

[வளரும்.]

முன்னிதழ்த் தொடர்ச்சி

மகாகவி காளிதாசரின்

# குமார சம்பவம்

—o—

தமிழாக்கம்

பரமேஸ்வரக் குருக்கள் — ச. இராமச்சந்திரன்

உங்களி னேடிவ னுற்றவ ராகு முருத்திரர் தங்களுடைத்
திங்க ளிளம்பிறை சேர விளங்கு சிரங்கள் குனிந்திடலின்
பொங்கிய தங்குரல் பொன்றிய தென்று புகன்ற குறிப்புரையுண்
டிங்கது யானு மறிந்திட நீவிரெடுத்து மொழிந்திடுவீர். (86)

என்று மியைந்திட மெங்குமிலங்கு மிலக்கண நூல்விதியை
வென்றிட வந்த விதிக்கு விலக்கென மேவிய நும்வலிமை
அன்றல கெங்கு மமைத்தா சாள லகற்றி விலகிடயார்
இன்று புளைத்தவ ரென்பதை நீரு மெனக்கு விளக்கிடுவீர். (87)

அமர்தர்க ளாகிய வானவ ரேயுற மன்னுல கின்றெனை முன்
தந்திட யானவை தம்மை யளித்த தனிப்பெருமைக்குரியீர்
வந்தத னேதுவு மென்னை யிவண்பெற மற்று நினைந்ததுமென்
இந்த விதத்தினி னீருறு யாவுமியம்பல் புரிந்திடுவீர். (88)

வேறு

பூவிய ருமனை பொய்கைய தன்மேல்
மேவிய மெல்வளி வீசிய போது
யாவ மலங்க லொத் தாயிரங் கண்ணால்
தேவர் குருவினைத் தேவர்கோ னோக்க. (89)

இந்திர னருக் கிருவிழி பெற்றும்
அந்தமி லாயிர மக்கம தன்மேல
முந்து சிறப்பினில் முன்னுற கண்போல்
அந்தகல் லாசா னயனுக் குரைப்பான். (90)

# சைவ பரிபாலன வித்தியாலயம்

வியாவில் — காரைநகர்

மேற்படி வித்தியாலயப் பரிசளிப்புவிழா மார்கழி மீ உ௩ (23-12-55) வெள்ளிக்கிழமை மாலை வடபெரும்பகுதி உதவி வித்தியாதிகாரி ஸ்ரீமான் S. தியாகராசா அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது.

வித்தியாசாலை அதிபர் திரு. இ. நாகலிங்கம் அவர்கள் பாடசாலைப்பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்கும் பெரியாரையும், அவரது பாரியாரையும் மகளையும் உபாத்தியாசகர்களையும் பரிசுக்குரிய பொருளுதவி புரிந்த பெரியார்களையும் சபையோரையும் வரவேற்று பாடசாலை வளரச் செய்ய வேண்டியனபற்றிக் கூறினர். வித்தியாசாலைமாணவர்கள் தமிழ்கல்வி, சைவசமயம் கடவுள் வழிபாடு செய்யும் வகைகளைப்பற்றி பெற்றோருக்கு அறிவூட்டும்வகையில் சிறந்த சம்பாஷணை மூலம் விளக்கினர்.

பாடசாலைத்தலைமை ஆசிரியர் பண்டிதர் சி. இராமசாமி அவர்கள் பாடசாலையில் தற்போது கல்விவளர்ச்சி கூடிவருகிறதென்றும் பிள்ளைகளின் தொகை பெருகி வருவதால் அவசியம் ஒரு புதிய கட்டிடம் அமைக்கப்பட வேண்டுமென்றும், நெசவு - பன்னம் முதலாம் கைத்தொழில்களும் ஆங்கிலமும் விசேட பாடங்களாகக் கற்பிக்கப்பட்டுவருகின்றனவென்றும் இக்கிராமத்தில் இப் பாடசாலை ஓர் முன்மாதிரியாக அமைந்திருக்கிறதென்றும் அறிக்கை மூலம் வெளிப்படுத்தினர்.

நியாயவாதி திரு. வே. தில்லைநாதன் B. A. அவர்கள் பேசும்பொழுது பாடசாலை வளர்ச்சிபற்றியும், சமயத்துக்கும், தமிழுக்கும் நாம் எப்பொழுதும் போராடத் தயாராக இருக்க வேண்டுமென்றும், தற்பொழுது இலங்கையில சூழ்ந்துவருகிற சிங்களமயமாகும் இருளைப் போக்கத் தமிழ்மகன் ஒவ்வொருவனும் போராடி வெற்றியடைய வேண்டுமென்றும் உணர்ச்சி ததும்பப்பேசினர். தலைவர் அவர்களது புத்திரியுடன், ஸ்ரீமான்கள் ஆ. ச. கதிரவேலு M. A. கந்தையா R. கந்தையா ஆகியோர் பாடசாலைப் பரிசளிப்பு விழாவைப்பற்றியும் பெற்றோர் உணர்ந்து பாடசாலைக்குச் செய்யவேண்டிய பணிகள்பற்றியும் இனிது எடுத்துரைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள் விடுதலை இயக்கம்

கீரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலையத்தில் திரு. எம். பாலசுந்தரம் அவர்கள் பேசும்போது சிங்களம் மட்டும் அரசமொழியாக்குவதன் நோக்கம் தமிழ் மக்களுக்குக் கல்வி உத்தியோகம் ஆதிய துறைகளிலே சமசந்தர்ப்பம் இல்லாமற் செய்வதற்கேயாகுமென்றும் இத்தகைய நெருக்கடியான நிலைமையில் கட்சிக் கொள்கைகளைக் கூறுதல் சரியல்லவென்றும் தமிழ் மக்கள் யாவரும் கட்சி பேதமின்றி ஒன்று கூடித் தமிழ் விடுதலை இயக்கமொன்று ஆரம்பிக்க வேண்டுமென்றும் கூறினர்.

## கட்சிப்பற்றற்ற ஒற்றுமைக் கூட்டம்

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் இந்தமாசம் 7ந் திகதி பகலுறைகளிலுமுள்ள அறிஞர் கட்சிப் பற்றற்ற முறையில் ஒன்று கூடி மொழிப்பிணக்குப் பற்றி ஆலோசிப்பார்களென அறிய வருகின்றது. இக் கூட்டம் நியாயவாதி திரு. ஏ. வி. குலசிங்கம் அவர்களால் கூட்டப்படுகின்றதென்றும் வடக்கு கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளுடன் அகில இலங்கை முஸ்லிம் —சோனகர் சங்கப் பிரதிநிதிகளும் சமூகமளிப் பார்களென்றும் குறிப்பிடப்படுகின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிறுப்பிட்டி செல்லையா பொன்னையா வழக்காளி,
இல. M. B 2
எதிராக
புத்தூர் மேற்கு
1. சின்னத்தம்பி காசிப்பிள்ளையும்
2. பெண் நாகம்மாவும்
வண்ணார்பண்ணை கிழக்கு
3. K. வயிததி வைபெண்
வேலாசியும். எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1956ஹூ மாசி மீ 23உ வியாளக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க் கோயிற்பற்று புத்தூர் தெற்கு இறை அககன் தனை நி பரப்பு $4\frac{1}{2}$ யும் எல்லைகிழக்கு சுப்பர் கதிரவேலுவக்குடைய வாதனம், வடக்கு தம்பிப்பிள்ளை பெண் நாகமுத்துவக்குடைய வாதனம், மேற்கு இலகர் குமாரவேலுவகும் மறுபேருக்கு முடையவாதனங்கள், தெற்கு வளிப்பாதையும் வேலுப்பிள்ளை சரவணையுடையவாதனமும். செய்பயிர் வான்பயிர்களும தெற்கெல்லைக காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் வளிவாய்க்காலுரித்தும் இதடங்கலும்.

2. ஷை இறை அககனதனை நீ பரப்பு 3ம வீடும் வான்பயிர் செய் பயிர்களும் எல்லை கிழக்கு முருகர் அப்புக்குட்டிக்குடைய தேவலவன் கலட்டி என்னும் காணி, வடககு வேலுப்பிள்ளை சரவணைக்குடைய காணி மேற்கு செல்லத்துரை பெண் சின்னம்மாவக்குடையகாணி. தெற்கு ரோட்டு இதடங்கலும். இதற்குள்ளிருக்கும கிணற்றிலுரித்தும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில் மட்டுவில் தெற்கு இராசசுந்தரம் அற்புதராசா — வழக்காளி.
எதிர்
இல. 905 M.
1. சண்டிக்குளி சாமுவேல் தம்பிரத்தினம் சொலமனஸ்
2. பெண் மில்லி இராசம்மாவும்.
எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸதிறிக் கோட்டில் 905ம் இலக்கவழககில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே காணும் ஆதனம் 1956 ம் ஆ மாசி மீ 1ந் உ பிற்பகல் 2 மணியளவில் அக் காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 1558-61 சதமும், 7-10-54 தொடக்கம் 28-2-55 வரையும் ரூபா 1200/= க்கு 7% வீத வட்டியும் கூடிவரும் தொகைக்கு 29-2-1955 தொடக்கம் இறக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 197. 75ம்.

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் பச்சிலைப்பளிப்பகுதி முள்ளிப்பற்று கோவிற்பற்று இயக்கச்சி பிறை நாதி கந்தன்பனை நிலப்பரப்பு 28 எல்லை கிழக்கு குளமும்; முடிக்குரிய நிலமும், வடக்கும் மேற்கும் முருகர் கதிர்காமருககுரியவாதனம், தெற்கு மண்தெரு. இதடங்கலும் செய்பயிர் வானபயிர்களும், பதிவு இல B 19/114.

மூ. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்.

சாவகச்சேரி,
1956ம் ஆ தைமீ 4 உ
M 212 6-1-56 (கு 50)

4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்,
1955ம் ஆ மார்கழிமீ 29 உ.
M 214 6-1-56 (கு 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சண்டிக்குளி
1. வைத்தியநாதர் கதிரவேலுவும் பெண்
2. பாறுவதிப்பிள்ளையும்.
வழக்காளிகள்
இல. 11786
எதிராக
தற்போது விடைத்தத்தீவு மன்னர்
சண்டிக்குளி
1. வரப்பிரகாசம் துரையப்பாவும் பெண்
2. கதறின்
3. யோசேப் யேம்ஸ் No. 13, ரசல் ரோட், யாழ்ப்பாணம்.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11786 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956 ஹூ மாசி மீ 23 உ. வியாளக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

காணி வி-ரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் சண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை கோயில்புலமும் தருபகத தோட்டமும் பா நில இல 2, வீடுய் குசினியும் கிணறும் மற்றும அதைச் சேர்ந்தவைகளும் எலலை கிழக்கு கண்டி ரோட்டு வடகடு எதிராளிகளின் ஆதனம், மேற்கு ஞானப்பிரகாசம் பெண் இராசம்மாவும் H. சுவஸ்பின் உருமைக்காறருடைய ஆதனங்கள், தெற்கு விஞசித்தம்பி மகள் பாக்கியத்தின ஆதனம். இதடங்கலும்.

செ இரத்தினசபாபதி
கொமிஷனர்
51, 4ம் குறுக்குததெரு
யாழ்ப்பாணம் 3-1-56.
M 213 6-1-56. (கு 200)

கலட்டி

## கற்பகப் பிள்ளையார் கோவில்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T R. 84-ம் இலக்க வழக்கின் தீர்வையின் பிரகாரம், மேற்படி கோவிலைப் பராபரிப்பதற்கு நிகழும் ஜனவரி மாதம் 8-ந் திகதி சாயங்காரம் 5 மணியளவில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பெறும்.

நிகழ்ச்சிகள்

1 ஷை கோவிலைப் பராபரிப்பதற்கு டிரஸ்ட்டிஸ் தெரிவு செய்தல். (Board of Trustees).

2 ஷை கோவிலின் திருப்பணி வேலையும், கும்பாபிஷேகமும் செய்ய ஆவன செய்தல்.

3 வேறு விஷயங்கள்.

இக்கோவிலில் வழிபடுவோர்கள் யாவரையும் சமூகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்

இங்ஙனம்
வி. நவரத்தினராசா
காரியதரிசிக்காக

கலட்டி, வண்கிழக்கு
2—1—56,

M 215 6-1-56

## தீர்க்கதரிசனத்துடன் ...... .... .... ...

2-ம் பக்கத்தொடர்ச்சி

யாவிலும் சைவசித்தாந்தப் பிரசாரவேலையிலேயே காலத்தைக் கழித்ததும, திருவாவடுதுறை மடாதிபதிகளால் "நாவலர்" என்னும் பட்டப்பெயர் சூட்டப்பெற்றதும் யாவருமறிந்ததே. ஆரம்பத்தில் இவரை ஆதரிக்க மறுத்த யாழ்ப்பாண மக்கள் இறுதிக் காலததில் போற்றி வணங்கினர். ஒருமுறை இந்தியாவினின்றும இவர் இலங்கை திரும்பியபோது யாழ்ப்பாண மக்கள் இவரை வரவேற்ற மாதிரியை அக்கால இலங்காபிமானிப் பத்திரிகை பின்வருமாறு வர்ணித்திருக்கின்றது.

"உவில்லியம்" என்னும் பிரசித்தி பெற்ற வள்ளமே அப் பெரியாரையும் அவருடன் வந்தவர்களையும் ஊர் காவற்றுறைமுகத்திற்குக் கொண்டுவந்து சேர்ந்தது. மாலை ஐந்தரை மணியாயும் அங்கு குழுமி நின்றோர் ஆனந்தமேலீட்டினுல் ஆரகள் இறங்கி, யாழ்ப்பாணத்துள்ள மக்கள் சூழ்தரப் பந்தரின்கீழ் வந்து, விசேஷமாக அலங்கரிக்கம்பட்ட பலலக்கில ஏறி, வாத்திய கோஷத்துடன் தம்மை எதிர்கொள்ளும்படி வந்தோரெல்லாம் இருமருங்கிலும் மெல்ல நடந்துவர அப்பல்லக்கின்மீது வருவாராயினர்............"

நாவலர் எல்லோரையும் போல ஒருபெண்ணை விவாகம் செய்துகொண்டு நல் வாழ்க்கை நடத்தியிருக்கலாம். உண்மையில் அவர் வாழ்க்கை ஒவ்வொரு கணமும "சேவை" "சேவை" என்றே சென்றுகொண்டிருந்தது. "என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று முழங்கிய நாவுக்கரசர் வழிவந்தவரலலவா? மகான்களின் வாழ்க்கையில் எத்தனையோ சமபவங்கள் நிகழுகின்றன. விதி மதியை எதிர்க்கிறது. மதியை விதி புறமுதுகிடச் செய்கிறது.

(வரும்)

## உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 8—1—56 —— 14—1—56

**மேடராசி** அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. ஒருபோது நீர் சுகவீனமாய்ப் படுக்கவேண்டி வரககூடும். அபாயங்களைப்பற்றியும் எச்சரிக்கையாயிருக்கவும். பணத்துறையில் நல்லவாரம. ஞாயிறு பிற்பகல் திஙகள் செவ்வாய் கவனமாய்க் கழிககவேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பச் சிக்கல்கள் நீக்கப்படாமல் நிலைக்கும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. நண்பர் அதிக உதவியாயிருப்பர். உத்தியோகத்துறையில நலலவாரம் புதன் வியாழனும் வெள்ளி காலையும கவனமாயக கழிக்கவேண்டும்

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம 1,2,3

கடைசி இரு நாள்கள் தவிர இந்த வாரம் மிக நலலதாயிருக்கும். நீர் சில நல்ல புதினங்களைப் பெறுவீர் உததியோக சித்திக்கும் எதிரிகள் அழிவுக்குமிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

தேகசுகம் சிக்கலாகவேயிருக்கும். வயிற்றுக்கோளாறுகள் ...... ஒன்றையும் புதிதாய்த் தொடஙகவேண்டாம். வாரஇறுதியில் தனலாபம நிச்சயம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

அபாயங்களைப்பற்றி இந்த வாரம் எச்சரிக்கையாயிருக்கவும். இரகசியப்பகைவர்கள் மூலமும் இனத்தவர்கள் மூலமும் இடைஞ்சல்களுக்கிடமுண்டு குடும்பக் கருமஙகளும் சிறிதும் திருப்தியாயிருக்கமாட்டா.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் சில பிழை எண்ணங்களை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். உத்தியோகத்துறையில் நல்லவாரம், ஆனுல் பணத் துறையில் அதிகம் முன்னேற்றமடையமாட்டீர். இனத்தவர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்வார்கள்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம்

இந்தவாரம் நீர் சண்டை தொடுக்க முந்துவீர். செலவும் அதிகரிக்கும். ஆனுல் அவற்றைச் சமாளிக்கவேண்டியது பெறுவீர். வார இறுதியில் நண்பர் அதிக உதவி செய்வர்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அநுஷம, கேட்டை.

புது முயற்சிகளுக்கு நல்லவாரம், ஆனுல் தீர்மானங்கள் செய்வதற்கு முன ஆழ்ந்து ஆராய்க உமககு மன அமைதி இருக்க மாட்டாது. இனத்தவர்களுடன சண்டைகளைத் தவிர்க்கவும்.

**தனுராசி** மூலம் பூராடம உத்தராடம் 1 பாதம்

தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்க மாட்டாது, மனத்துன்பங்களுக்குமிடமுண்டு. நண்பருடன் பிழை எண்ணஙகளுக்கிடமுண்டு. ஆனுல் பணத் துறையில் நலல வாரம், பழைய ஈடுகள் நல்ல பலனைத்தரும்.

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் உம்முடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர். உம்முடைய துன்பங்களுட் பல நீக்கப்படும். தனலாபமும்நிச்சயம். ஆனுல் குடும்பச் சூழலில் சில பிழை எண்ணங்களுககிடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

சிலபுது நட்புத் தொடர்புகளை நீர் இந்த வாரம் உண்டாக்குவீர். காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபஙகளுக்குமிடமுண்டு. புகழுக்கும் பகைவரழிவுககுமிடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

வாரத்தின் முதல்நாள் கவனமாய்க்கழிக்கவேண்டும். நடுவாரத்தின பின் சில இடைஞ்சல்களிலிருந்து நீர் நீஙகக்கூடியதாயிருககும், வேலை கூடுதலாகும உமக்குமனச்சமாதானமுமிருக்கமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை அடையாள
இரட்டைப் பீலி

# வீட்டு ஓடுகள்

திறமானதிலும் திறமானது

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது. பெருமழையில் மிகச்சிறிய அளவு நீரை உறிஞ்சுகின்றது. மழைகாலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந் தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக

நீண்டகால உபயோகத்தில் திறமான பொருளே மலிவானதாகும்.

வில்லியம் மேதர் சன்ஸ்.
சோல் ஏஜன்ஸ், யாழ்ப்பாணம்.

M. 204. 23, 25-12—6, 13-1.


# மாசி உத்தரமே திருவள்ளுவர் திருநாள்

—:0:—

## மேன்மக்களோடு சைவசித்தாந்த மகா சமாசம் கொண்டாடிய நாள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல சற்குருநாதசுவாமிகள் சமயாசாரியர்களின் சைவச்சால்பு வழிபற்றியும், திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானங்களின் திருவுள்ளப்படியும், பண்டு தொட்ட சைவமரபு நோக்கித் தமது நுண்மாண் நுழைபுலங்கொண்ட அருள்அறிவினாலே உணர்ந்து வள்ளுவர் திருநாளை மாசி உத்திரமென வகுத்தனர். இதனைத் தமிழ் நாட்டுச் சைவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

பரம்பரைச் சைவவேளாண் மரபினரும சைவப் பெரியாருமாகிய திருமயிலை திரு. கா. சுப்பிரமணியம பிள்ளையவர்களும் வேறுவிடயங்களில் மாறுபாடான கருத்துடையவராயிருந்தாலும் இவ்விடயத்தில உண்மையையே கடைப்பிடித்திருக்கின்றனர். வள்ளுவர் திருநாளை மாசி உத்திரமெனக் கொண்டாடியிருக்கின்றனர். அவர் காரியதரிசியாயிருந்து தொண்டாற்றிய சைவ சித்தாந்த மகாசமாசம் கொண்டாடியிருக்கின்றது. இதனை 2-12-55ல் வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் தென்னிந்தியா ஸ்ரீ சிவ சூரியநாராயணபிள்ளை யவர்கள பலரும் அறியும்படியாக வெளிப்படுத்தியுள்ளார்கள். கொழும்பு தமிழ்மறைக் கழகத்தார் இதனைநன்குணர்தல்வேண்டும்.

திருவள்ளுவரைப் பொதுவாக எல்லாச் சமயத்தாரும கைக்கொண்டாலும் அவர் சிறப்பாகச் சைவ சித்தாந்த ஞானியாவர். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மகா வித்துவான் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள், மகாசந்நிதானம் திருவுளப்படி "திருவள்ளுவ நாயனாரும் பெரிய புராணமும்" என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அந்நூலில வள்ளுவரைச் சைவசித்தாந்தி என்றே பல நியாயங்கள் காட்டி விளக்கியிருக்கிறார்கள். திருக்குறளை ஆராயப் புகுந்த கல்லாடனாரும் வள்ளுவரைச் சைவசித்தாந்தி என்றேகூறுகின்றனர்என்று அந்நூலிலகூறப்பட்டிருக்கிறது. அதுவுமன்றி, வள்ளுவனார் சிவனருள் பெற்றுப் பசு கரணங்களெல்லாம் சிவகரணமாய் நிகழப்பெற்ற சித்தாந்த சிவநெறிச் செல்வரெனவும் விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே திருவள்ளுவருடைய உண்மைத் திருநாள் சைவ சித்தாந்தச் சால்பு வழியாக வந்த திருநாள் என்ப

தென்மயிலை

திரு. செ. கோவிந்தசாமி

திற் சந்தேகமில்லை. இதைக் கொழும்பு தமிழ்மறைக் கழகத்தாரும், வைகாசி அநுஷத்தைப் பின்பற்றும் பிற சபைகளும, மன்றங்களும இனியாவது உணர்வார்களாக. வருகிற மாசிமாதம் 16-ந் திகதி (28-1 56) செவ்வாய்க்கிழமை குருபூசைத் திருநாள் நிகழவிருப்பதால் சைவமக்கள் எல்லோரும் அஞ்சலி செய்து மகேஸ்வர பூசை, திருமுறைப் பாராயணம முதலியன அங்காளில நடாத்தி இன்புறுக!

— —

## திருவாதவூரடிகள் புராணப் படிப்பு

— —

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் வண்ணார் பண்ணைச் சிவன்கோவிலில் திருவெம்பாவைப் பூஜாரம்பத தினன்று (19-12-55) தொடக்கம் (28-12-55) புதனகிழமைவரை திருவாதவூர்ப் புராணம் படித்துப் பயன் சொல்லப்பட்டது. பண்டிதர் வ. மு. இரததினேசுவா ஐயர் சித்தாந்த பண்டிதர் மே. சே. மசுந்தரமுதலியோர் மேற்படி படிப்பைச் செவ்வனே நடாத்தினார்கள். நூற்றுக்கணக்கான சைவமக்கள படிப்பைக்கேட்டு நற்பயனடைந்தார்கள். இந்தப் புராணம் மிகப் பழைய காலத்தில் இத்திருக்கோயிலில் படிக்கப்பட்டதென்றும் பின்னர் இதன்படிப்பு மிக நெடுங்காலமாக நடைபெறவில்லையென்றும் இதனை இவ்வருடம் சைவபரிபாலனசபையார் நடத்தியதற்கு சைவ மக்கள் சபைக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாயிருக்கவேண்டும் என்றும் படிப்புப் பூர்த்தியின் பொழுது திரு. வ. கார்த்திகேசு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திருவாதவூரடிகள் புராணம சைவமக்களுடைய சிவபக்தியையும் சைவ ஒழுக்கத்தையும வளர்க்கவும், மாணிக்க வாசக சுவாமிகளுடைய திருச்சரித்திரத்தை சைவமக்கள் அறியவும் மிகச் சிறந்த நூலென்பது யாவருமறிந்ததே.

மனத்தொடு வாய்மை மொழியிற்
றவத்தொடு
தானஞ்செய்வாரிற் றலை

## திருவாதவூரடிகள் புராணப்படிப்புவிழா

— —

ஷ விழா மார்கழி மீ 11 உ (26-12-55) திங்கட்கிழமை மாலை தெல்லிப்பழை கிழக்கு காசிவிநாயகர் ஆலயமண்டபத்தில், பல்கலைக்கழக விரிவுரையாளர் சைவத்திரு சி. முருகவேள் B. A. (Hons) அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

மாலை 6 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப்பெருமானுக்கு விசேடபூசைகளும் அதன்பின் புராணபடனமும்நடைபெற்றன. அதன்பின் நடந்த பொதுக்கூட்டத்தில் தலைவர் பேசுகையில் சைவ இளைஞர்களுக்கு அவசியம் வேண்டப்படுவது கடவுள் வழிபாடேயென்றும், அந்த வழிபாட்டை அவர்கள் தவறாது செய்துவரின் தமதுவாழ்க்கையில ஏற்படும் கஷ்டங்களையெல்லாம் சகிக்கமுடியுமென்றும் இன்றைய உலகில் பொதுவுடைமை முதலிய கொள்கைகள் தோன்றி இளைஞர்களைக் கலக்குகின்றனவென்றும், சைவ இளைஞர்கள் நல்லாய்வருவதற்கு அவர்களது சூழ்நிலை நல்லதாக அமையவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். திரு சு. சிவவாகீசர் திரு. ச. தனஞ்செயராசசிங்கம், திரு. செ. குணரத்தினம், திரு. நா. ஆறுமுகம் ஆகியோர் சைவசமய அனுட்டானத்தின் அவசியத்தை விளக்கிப் பேசினார்கள்.

புற்றளைச் சாரதாபீட வித்தியாசாலை
அல்லது
வராத்துப்பளைக் கலவன் பாடசாலை

தர்மகர்த்தாக்கள் சபையின்

21—12—53 தொடக்கம் 13—12—55 வரையுமுள்ள

## வரவு—செலவுக் கணக்கு

| | | வரவு ரூ. ச. | செலவு ரூ. ச. |
|---|---|---|---|
| 1 | 1952-ம் ஆண்டு கையிருப்புப்பணம் | 277 51 | |
| 2 | குலை விற்றவகையில் | 6 00 | |
| 3 | அரசாங்க உபகாரப்பணம் (2 வருடம்) | 1472 50 | |
| 4 | கணக்குப்பரிசோதகருக்குக் கொடுபட்ட பணம் | | 30 00 |
| 5 | கணக்கு பத்திரிகையிற் பிரசுரிப்பதற்கு கொடுபட்ட பணம் | | 20 00 |
| 6 | வெள்ளை அடித்த செலவு | | 279 15 |
| 7 | பாடசாலை கொப்பி வகை | | 59 25 |
| 8 | அச்சிட்ட செலவுகள் | | 6 50 |
| 9 | கற்கூசு வரி | | 120 00 |
| 10 | மேச்சல் செலவு | | 593 92 |
| 11 | வேலிகள் அடைத்த செலவு | | 159 14 |
| 12 | தண்ணீர் அள்ளிவைத்த செலவு | | 300 00 |
| 13 | தனாதிகாரியின் பிரயாணச் செலவு | | 5 40 |
| 14 | தபால் செலவு | | 2 75 |
| 15 | தர்மகர்த்தா சபைக்கு கொப்பிச் செலவு | | 4 75 |
| 16 | கற்கூசு வாளி | | 3 50 |
| 17 | கையிருப்புப் பணம் | | 171 65 |
| | | 1756 01 | 1756 01 |

க. சேனாதிராசா
கௌரவ தனாதிகாரி

புலோலி தெற்கு
பருத்தித்துறை
13—12—55.

பரிசோதிக்கப்பெற்று சரியெனக் காணப்பெற்றது.
சு. பே. கந்தையா
பகிரங்க கணக்குப் பரிசோதகர்

M 209 30-12, 6-1-56


யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறாப்பர்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday Jan, 6 1956

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org